1973 ஏப்ரல் 3]

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(எ) 2—10—1970-க்கு பின்னர் அவர்களுடைய ஊதியங்களைத் மாற்றியமைத்தபோது, அது கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டதா?

(ஐ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். முதுநிலைப் பொறியியல் ஆசிரியர்களுக்கு ரூ. 35-ம் இளநிலை பொறியியல் ஆசிரியர்களுக்கு ரூ. 25-ம் தனிச் சம்பளம் அளிக்கப்பட்டு வந்தது.

(இ) இல்லை.

(உ) திருத்தப்பட்ட சம்பள விகிதம், முந்திய சம்பள விகிதத்தையும் தனிச் சம்பளத்தையும் கணக்கில் கொண்டு திருத்தி அமைக்கப்பட்டதால் 2—10—1970 முதல் தனிச் சம்பளம் கொடுக்கக்கூடாது என உத்தரவு இடப்பட்டது.

(எ) இல்லை. இருப்பினும் தனிச்சம்பளத்தை சம்பள நிர்ணயம் செய்யும் போது கணக்கில் எடுத்துக்கொள்ளலாம் என்று அரசு 26—2—73-ல் உத்தரவிட்டுள்ளது.

(ஐ) இக்கேள்விக்கு இடமில்லை.

Engineering Sections in Secondary Schools

* 333 *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have ordered the continuance in service of all unqualified Senior and Junior Mechanics serving in the Engineering Sections in Secondary Schools;

(*b*) if so, the details thereof; and

(*c*) the qualifications which the Government propose to prescribe for them?

உயர்நிலைப் பள்ளிகளின் பொறியியல் பிரிவுகள்.

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளின் பொறியியல் பிரிவுகளில் பணியாற்றும் தகுதி பெறாத முதுநிலை, இளநிலை கம்மியர் (Mechanics) அனைவரையும் தொடர்ந்து பணியில் வைத்துக்கொள்வதற்கான ஆணை எதையேனும் அரசு பிறப்பித்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அந்தக் கம்மியர் என்னென்ன தகுதிகள் பெற்றிருக்க வேண்டுமென்று அரசு வரையறுக்கக் கருதியுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கும் முழுத்தகுதி பெறாத இளநிலை முதுநிலை மெக்கானிக்குகளில் மூன்று பள்ளி ஆண்டுகளுக்கும் அதற்கு மேலும் பணியாற்றியுள்ளவர்களை கோடை விடுமுறைகளில் பணியிலிருந்து நீக்காமல் பணியில் தொடர்ந்து இருந்து வர அனுமதிக்கும்படியும், மற்றவர்களை வழக்கம் போல் பள்ளி ஆண்டு முடிந்தபின் தற்காலிகமாக நீக்கிவிடலாம் என்றும் அரசு உத்தரவிட்டுள்ளது.

(உ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

Headmasters of Aided Secondary Schools

* 334 Q.—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether G.O. Ms. No. 2033, dated 24th September 1960 and G.O. Ms. No. 1858, dated 20th November 1967, of the Education Department provide for a higher scale of pay for Headmasters of aided Secondary Schools under private management in which there are more than 25 sections;

(*b*) if so, whether this higher scale of pay has been allowed to all the Headmasters of such schools in Kanyakumari district; and

(*c*) if not, the reasons therefor?

மானியம் பெறும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்

திரு. எம். ராஜா அய்யர் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித் துறையில் 24—9—1960 ஆம் நாளன்று பிறந்த 2033 ஆம் எண் அரசாணையும், 20—11—1967 ஆம் நாளன்று பிறந்த 1858 ஆம் எண் அரசாணையும் 25 வகுப்புப் பிரிவுகளுக்கும் அதிகமாகவுள்ள, மானியம் பெறும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு உயர்சம்பள விதத்துக்கு வகை செய்கின்றனவா?